# குருசேத்திரம்

Guruseththiram

කුරුසේත්තිරම්

களம்: 06 கணை: 39 ஒகஸ்ட் - 2025



ISSN 3093-5415

Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை**

ISSN 3093-5415



**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

**பதிப்பாசிரியர்**

திரு. ஞா.கயூரன்



**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு,
யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**

guruseththiram@gmail.com

guruseththiram.blogspot.com


Scan Me


**பொறுப்புத் துறப்பு**

குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


## உள்ளே...


ஆசிரியர் பார்வையில்... 1

காட்சியும் கருத்தும் 2

இலங்கையின் கல்வி முகாமை மற்றும் நிர்வாக செயல்பாடுகள்: ஆய்வுப் பகுப்பாய்வு 2

மாதராய் பிறப்பதற்கு மாதவம் செய்யவேண்டும் 5

நானும் எவரெஸ்ட்டும் 5

கல்வி ஆய்வில் குடித்தொகை இடைவெளி 6

சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும் 8

அம்மா... 11

A Day with Clouds 11

ஆண்தேவதை 11

சலங்கை ஒலி 11

Dhora 'WIN' வரிகள் 12

Digital learning transformation 12

"இன்பா"வின் சிந்தனைத் தொடர் - 30 14

உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள் 15

Believe in Your Dream 16

China's Rise in Embodied AI & Robotics 17

செம்மொழியான தமிழ்மொழி 18

தலைமைத்துவ நடைமுறையில் எதிர்பார்ப்புகள் 20

பிள்ளைகளிடம் உயர்ந்த குணங்களை விதைப்போம் 21

கதை வழி அற மொழி 22

பேசும் படங்கள் 22

# ஆசிரியர் பார்வையில்...

குருசேத்திரம் களம் 6 இன் 39 வது இதழாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். குருசேத்திரம் படைப்பாளிகளுக்கும் ஆர்வலருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றேன். குருசேத்திரம் களம் 6 இன் 38 வது இதழாக புதுப் பொழிவுடனும், பக்க வடிவமைப்புடனும் அதே வேளை மிக முக்கிய திருப்பமாக ISSN இலக்கத் துடன் வெளிவந்தமையை கல்விப்புலம் சார்ந்த பலரும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திய அதேவேளை கல்விப்புலம் சார்ந்த கட்டுரைகள் அதிகமாக வெளிவந்தமையினால் இவ்விதழ் ஆசிரியவாண்மைத்துவ விருத்திக்கு அவசியமானதாக அமைந்துள்ளதையும் குறிப் பிட்டுள்ளனர். அந்தவகையில் பதிப்பாசிரியர் திரு.ஞா.கயூரன் உட்பட கட்டுரையாளர்களுக்கும் இளம் படைப்பாளர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் பதிவிடுகின்றேன்.

கடந்த ஆசிரியர் தலையங்கத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகளின் மீதான கவனக் குவிப்பு பறட். தமிழர் கல்வி, மொழியின் இருப்புத் தொடர்பான அறிவார்ந்த விவகாரம். இவை தொடர்பாக ஏதாவது ஆக்க பூர்வமான செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாக அறிய முடிய வில்லை. முகநூல் விமர்சனங்களும் மறுப்பறிக்கை களும் சமூகத்தில் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தரப்போவதில்லை. தற்போது கல்வியில் மறு சீரமைப்பை பேசுபொருளாக்கி முகநூல் விளம்பரம் நடைபெறுகின்றது. கிராமப்புறங்களில் இருந்து சகல மாணவர்களுக்குமான கல்வியியல் சம வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் கிராமப் பாடசாலைகளை தக்கவைத்தக்கொள்ள முடியும். சாதாரண பெற்றோரின் அபிலாசைகளை ஒரு பாடசாலை பூர்த்திசெய்யுமாயின் அப்பாடசாலை வெற்றி பெற்ற பாடசாலையாக மிளிர வாய்ப்புண்டு. ஆக கல்விக்கான சம வாய்ப்பு என்பது பிரபல பாடசாலையிலிருந்து கிராமப் பாடசாலைகளை நோக்கி நகர்வது எதிர்காலத்தில் பயனைத் தருமென்பது குறிப்பிடத்தக்கது.

எமது சமூகத்திற்கான நிலைபேறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படு கின்ற சிரமங்களை நீங்குவதற்க, அரச திணைக்கள அதிகாரிகளும், அறிவார்ந்த சமூக உறுப்பினர்களும் அரசியல் அமைப்புக்களும், பயனாளர்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அதற்கான தடைகளை நிவர்த்திக்க வேண்டும். மாறாக ஒருவர் மீது மற்றவர்களின் குற்றச்சாட்டு, அவமரியாதைப் படுத்தல், ஏளனம் செய்தல் போன்ற செயற்பாடு களை தவிர்த்து எமது இளம் சமூகம் எதிர்காலத்தில் ஆளுமையுள்ள பிரஜைகளாக மிளிர சகலரும் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும்.

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே ஆரம்பிக்கட்டும்...

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
PhD in Education- SL
பிரதம ஆசிரியர்.

**Table 3b : G.C.E.(O/L) Examination - 2024**
**Performance of School Candidates (1st Attempt) by Province** 2024

| | No. Sat for 5 or more subjects | Qualified for G.C.E(A/L) | | Passed in 6 or more (including 1st Lan. & Maths) with 3 credits | | Failed in All Subjects (Appeared for 6 or more subjects) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | No. | % | No. | % | No. | % |
| 1 Western | 81244 | 60509 | 74.4781 | 54347 | 66.8936 | 2026 | 2.49372 |
| 2 Central | 42173 | 31174 | 73.9193 | 26503 | 62.8435 | 757 | 1.79499 |
| 3 Southern | 41909 | 31702 | 75.6448 | 27954 | 66.7017 | 858 | 2.04729 |
| 4 Northern | 16370 | 11437 | 69.8656 | 10193 | 62.2663 | 611 | 3.73244 |
| 5 Eastern | 26222 | 19474 | 74.2659 | 16712 | 63.7327 | 474 | 1.80764 |
| 6 North Western | 39405 | 28166 | 71.4782 | 24509 | 62.1977 | 984 | 2.49715 |
| 7 North Central | 23289 | 16360 | 70.2478 | 13770 | 59.1266 | 714 | 3.06583 |
| 8 Uva | 21641 | 15830 | 73.1482 | 13495 | 62.3585 | 448 | 2.07014 |
| 9 Sabaragamuwa | 30451 | 22374 | 73.4754 | 19971 | 65.5841 | 683 | 2.24295 |
| **All Island** | **322,704** | **237,026** | **73.45** | **207,454** | **64.29** | **7,555** | **2.34** |





Figure 3b : G.C.E.(O/L) Examination - 2024
Performance of School Candidates (1st Attempt) by Province
(Arranged in the descending order of the percentage qualified for G.C.E.(A/L)

*மூலம்: பரீட்சைத் திணைக்களம்*


# காட்சியும் கருத்தும்

**கலாநிதி சு.பரமானந்தம்**





Transport related injuries were commonly seen among adolescents, youth and young adults, with 76% of victims being males (male: female ratio was 3:1). However, transport injury related deaths were common among children <5 years, youth aged between 21-25 years and adults between 66-70 years of age.




*நன்றி : இணையம்*

## இலங்கையின் கல்வி முகாமை மற்றும் நிர்வாக செயல்பாடுகள்: ஆய்வுப் பகுப்பாய்வு

**திரு ப.விஜிதரன், SLPS**
NTD, B.Ed & M.Ed.
உதவி அதிபர்,
வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

**சுருக்கம் (Abstract)**

கல்வி முகாமை என்பது சமூக முன்னேற்றத்தின் அடித்தளம். இலங்கையில் பாடசாலை முகாமை அரசியல் தலையீடு, வளங்களின் பற்றாக்குறை, திட்டமிடல் குறைபாடுகள், ஆசிரியர் நியமன சவால்கள் மற்றும் கண்காணிப்பு பலவீனங்கள் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. இவ்வாய்வு கட்டுரை, இலங்கையின் கல்வி நிர்வாகக் குறைபாடுகளை ஆய்வு செய்து, சீரமைப்பு பரிந்துரைகளை ஆய்வு ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைக்கிறது.

**கலைச் சொற்கள்** : கல்வி நிர்வாகம், இலங்கை, பாடசாலை முகாமை, ஆசிரியர் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம்

**அறிமுகம்**

கல்வி முகாமை என்பது திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு ஆகிய மூலக்கட்டங்களில் அமைந்த ஒரு அமைப்பு முறையாகும் (பெரேரா, 2021). இலங்கையில் 1945ஆம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளபோதும், குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு போன்ற போர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகள் பலவீனங்களை சந்தித்து வருகின்றன (யுனிசெ.்.ப், 2018). இந்த ஆய்வின் நோக்கம், இலங்கையின் கல்வி முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகளை வெளிப்படுத்தி, ஆதாரபூர்வமான சீர்திருத்த வழிகளை முன்வைப்பதாகும்.

**கல்வி முகாமையில் குறைபாடுகள்**

1. அரசியல் மற்றும் நிர்வாக தலையீடு

அதிபர் மற்றும் கல்வி அதிகாரி நியமனங்களில் அரசியல் செல்வாக்கு அதிகம் காணப்படுகிறது (விஜேசூரிய, 2019). வடமாகாண கல்வித்துறை (2017) அறிக்கையின்படி, ஆசிரியர் மாற்றங்கள் பாடத் தேவைக்கேற்ப அல்லாமல், அரசியல் அழுத்தத்தினால் நிகழ்கின்றன.

2. திட்டமிடல் மற்றும் கொள்கை குறைபாடுகள்

ஆட்சிமாற்றம் ஏற்பட்டால் கல்வி கொள்கைகள் தொடர்ச்சியின்றி நிறுத்தப்படுகின்றன. உதாரணமாக, மகிந்த சிந்தன (2007) ICT கல்வி திட்டம், 2015 அரசாங்க மாற்றத்திற்குப் பின்னர் கைவிடப்பட்டது (பெரேரா, 2021).

3. வளங்களின் பற்றாக்குறை

உலக வங்கி (2020) தகவலின்படி, இலங்கையின் தேசிய ஆசிரியர்–மாணவர் விகிதம் 1:27 என்றாலும், கிராமப்புற பாடசாலைகளில் அது 1:40 ஆக அதிகரிக்கிறது. ஆய்வகங்கள், நூலகங்கள், கணினி வசதிகள் பற்றாக்குறையால் கல்வித் தரம் பாதிக்கப்படுகிறது (பெர்னான்டோ, 2020).

4. ஆசிரியர் முகாமை சவால்கள்

அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. வவுனியா கல்வி அலுவலகம் (2022) அறிக்கையில், விஞ்ஞான ஆசிரியர்கள் 22% பற்றாக்குறையுடன் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. கிராமப்புறங்களில் பணிபுரிய ஊக்குவிப்புகள் இல்லாததால் ஆசிரியர்கள் நிலைத்திருக்கவில்லை.

5. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குறைபாடுகள்

கண்காணிப்பு பெரும்பாலும் ஆவண அடிப்படையில் நடைபெறுகிறது மாணவர் முன்னேற்றம் நேரடியாக அளவிடப்படுவதில்லை (தேசியக் கல்வி நிறுவகம், 2019). கணக்காய்வாளர் பொது துறை (2018) அறிக்கை, கண்காணிப்பு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று வெளிப்படுத்தியது.

6. தொழில்நுட்ப பின்தங்கல்

ICT கல்விக் கொள்கைகள் உள்ளபோதும், கிராமப்புற பாடசாலைகளில் 60%க்கு மேல் இணைய வசதிகள் இல்லை (MoE, 2020). ஆசிரியர்களின் ICT திறனும் சீராக இல்லை.

**கல்வி முகாமைத்துவ கட்டங்கள்**

- **திட்டமிடல் கட்டம்**

தரவு சார்ந்த திட்டமிடல் குறைவாக உள்ளது. பாடசாலை அடிப்படையிலான (School-Based) சுயாட்சி போதியளவு வழங்கப்படவில்லை.

- **நடைமுறைப்படுத்தல் கட்டம்**

நிதி ஒதுக்கீடு தாமதமாகிறது. ஆசிரியர் வருகை குறைவு, பாடம் நடத்தும் நேரம் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை (World Bank, 2020).

- **கண்காணிப்பு கட்டம்**

கல்வி ஆய்வாளர்கள் பாடசாலைகளை முறையாக பார்வையிடுவதில்லை. அறிக்கைகள் தயாராகினும், நடைமுறைப்படுத்தல் இல்லை (Auditor General, 2018).

**பரிந்துரைகள்**

1. அரசியல் தலையீட்டை குறைத்தல் – அதிபர்கள் மற்றும் ஆசிரியர் நியமனங்களை திறன் அடிப்படையில் செய்தல்.

இலங்கையில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் நியமனம் பல இடங்களில் அரசியல் செல்வாக்கின் கீழ் நடைபெறுகிறது. இதனால் திறன் அடிப்படையில் அல்லாமல், அரசியல் விருப்பத்தின் அடிப்படையில் நியமனங்கள் ஏற்படுகின்றன. கல்வித் தரத்தை மேம்படுத்த திறமையான ஆசிரியர்களையும் நிர்வாகிகளையும் தேர்வு செய்வது மிக முக்கியம்.பாடசாலை அதிபர் தேர்வு மனிதவள முகாமைத்துவ அடிப்படையில் நடைபெற வேண்டும் அரசியல் காரணிகள் விலக்கப்பட வேண்டும். கல்வி அமைச்சு (Ministry of Education) மற்றும் தேசிய கல்வி நிறுவனம் (NIE) ஆகியவை நியமனக் கொள்கையை தர அடிப்படையிலான முறைக்கு மாற்ற பொறுப்பு வகிக்க வேண்டும்.

பொறுப்பானவர்கள்:

- கல்வி அமைச்சு
- மாகாண கல்வி திணைக்களம்
- மாவட்ட பாடசாலை நிர்வாகிகள்

2. நீண்டகால தேசிய கல்விக் கொள்கை

ஒவ்வொரு ஆட்சிமாற்றத்திலும் கல்விக் கொள்கைகள் மாறுவதால் பாடசாலை முகாமை பாதிக்கப்படுகிறது. ஒரு நிலையான சட்ட ரீதியான தேசிய கல்விக் கொள்கை தேவையானது. கல்விக் கொள்கை 10 முதல் 15 ஆண்டுகளுக்கான நீண்டகாலத் திட்டம் ஆக இருக்க வேண்டும்.பாடசாலை பாடத்திட்டம், ICT ஒருங்கிணைப்பு, ஆசிரியர் மேம்பாடு போன்ற கொள்கைகள் ஆட்சிமாற்றத்தால் மாற்றப்படக் கூடாது. கொள்கை, பாராளுமன்றத்தின் (Parliament) ஒப்புதலுடன் சட்டமாக்கப்பட வேண்டும்.

உதாரணம்: 2017-இல் அறிமுகமான 13 வருடப் பொதுக் கல்வித் திட்டம் (13-Year Compulsory Education) 2020-இல் புதிய ஆட்சி மாற்றத்தால் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. ஒரு சட்ட ரீதியான நீண்ட கால கொள்கை இருந்தால், இத்திட்டம் தொடர்ந் திருக்கும்.

பொறுப்பானவர்கள்

- தேசிய கல்வி ஆணைக்குழு (National Education Commission - NEC)
- கல்வி அமைச்சு
- பாராளுமன்றம்

3. வள மேம்பாடு

ICT வசதிகள், ஆய்வகங்கள், நூலகங்கள், விளையாட்டு அரங்குகள் ஆகிய அடிப்படை கல்வி வளங்கள் நாட்டின் பெரும்பாலான பாடசாலைகளில் இல்லாமல் உள்ளன. ICT ஆய்வகங்கள் மற்றும் கணினிகள் மாணவர்களின் டிஜிட்டல் திறனை மேம்படுத்தும். நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகங்கள் O/L மற்றும் A/L சித்திவிகிதத்தை உயர்த்தும் முக்கிய வளங்கள். தனியார் நிறுவனங்களுடன் (CSR) மற்றும் உலக வங்கி (World Bank) திட்டங்களுடன் இணைந்து வள மேம்பாடு செய்ய முடியும்.

பொறுப்பானவர்கள்:

- கல்வி அமைச்சு
- மாகாண கல்வித் திணைக்களம்
- உலக வங்கி/ UNICEF/ JICA போன்ற வெளிநாட்டு ஒத்துழைப்பு அமைப்புகள்

4. ஆசிரியர் மேம்பாடு

தொடர்ச்சியான பயிற்சி மற்றும் கிராமப்புற பணிக்கான ஊக்குவிப்பு. ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகள், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கூடுதல் ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டும். பாடப்பகுதி அடிப்படையிலான தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். வவுனியா, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் ஆசிரியர் தங்கியிருக்கும் சவால்களை சமாளிக்க வீட்டு வாடகை உதவித்தொகை, போக்குவரத்து சலுகைகள் வழங்கலாம். ஆசிரியர் மதிப்பீடு செயல்திறன் அடிப்படையில் நடைபெற வேண்டும்.

உதாரணம்: 2022-இல் தேசிய கல்வி நிறுவனம் (NIE) தொடங்கிய Blended Teacher Training Program மூலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பாடப்பரிமாற்றத் திறன் 45% → 75% ஆக உயர்ந்தது.

பொறுப்பானவர்கள்:

- தேசிய கல்வி நிறுவனம் (NIE)
- மாகாண கல்வி திணைக்களங்கள்
- ஆசிரியர் சேவை ஆணைக்குழு

5. தரவு சார்ந்த கண்காணிப்பு

தேசிய கல்வி தரவுத்தளமும் செயல்திறன் குறியீடுகளும் அறிமுகப்படுத்தல். ஒவ்வொரு பாட சாலைக்கும் தேசிய கல்வி தரவுத்தளத்தை இணைத்து, மாணவர், ஆசிரியர், சித்திவிகிதம் ஆகியவற்றை நேரடி கண்காணிப்பு செய்ய வேண்டும்.

School Performance Dashboard ஒன்றை உருவாக்கி, அதிபர், மாவட்ட கல்வி அலுவலகம், மாகாண கல்வி திணைக்களம் மூலமாக கண்காணிக்கலாம்.

மாணவர் வருகை, ஆசிரியர் வருகை, பாடசாலை மதிப்பீட்டு அறிக்கைகள் போன்ற தரவை மையமயமாக்குவது செயல்திறனை உயர்த்தும்.

உதாரணமாக 2021-இல் e-Local Education Monitoring System (eLEMS) அறிமுகப்படுத்திய பின், குருநாகல் மாவட்டத்தில் O/L சித்தி விகிதம் 52% → 70% ஆக உயர்ந்தது.

பொறுப்பானவர்கள்:

- கல்வி அமைச்சு
- தேசிய கல்வி தகவல் மையம் (NEMIS)
- மாகாண கல்வித் திணைக்களம்

6. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு

பாடசாலைகளில் E-learning, Digital Attendance Systems, School Management Software ஆகிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் கல்வித் தரத்தை அதிகரிக்கும். COVID-19 காலத்தில் Zoom, Google Classroom போன்ற வசதிகள் நகர்ப்புற பாடசாலைகளில் மட்டுமே பயன்பட்டன. எல்லா பாடசாலைகளுக்கும் அரசாங்கம் E-learning Platform ஒன்றை உருவாக்க வேண்டும். மாணவர் வருகையை Digital Attendance System மூலம் பதிவு செய்தால், வருகை விகிதம் 20% வரை அதிகரிக்கலாம். 2024-இல் வவுனியா மாவட்டத்தில் eSchool Management System அறிமுகப்படுத்திய பின், மாணவர் வருகை 65% → 85% ஆக உயர்ந்தது.

பொறுப்பானவர்கள்:

- கல்வி அமைச்சு
- ICTA (Information and Communication Technology Agency of Sri Lanka)
- மாவட்ட மற்றும் மாகாண கல்வி அதிகாரிகள்

## முடிவு

இலங்கையின் கல்வி நிர்வாகத்தில் திட்டமிடல் பலவீனம், நடைமுறை தாமதம் மற்றும் கண்காணிப்பு குறைபாடுகள் முக்கிய காரணிகளாக உள்ளன. குறிப்பாக வவுனியா போன்ற போர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இவை மேலும் தீவிரமாகக் காணப்

படுகின்றன. அரசியல் தலையீடு குறைக்கப்பட்டு, தரவின் அடிப்படையில் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி முகாமை நடைமுறைப்படுத்தப்பட்டால் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியும்.

**மேற்கோள்கள்**


Auditor General's Department. (2018). *Annual report on education monitoring*. Colombo: Auditor General's Department.

Fernando, S. (2020). ICT integration in Sri Lankan schools: Challenges and prospects. Colombo: National Institute of Education.

Ministry of Education. (2020). *ICT in education policy review*. Colombo: MoE.

National Institute of Education. (2019). *School performance evaluation report*. Colombo: NIE.

Perera, L. (2021). Educational planning and policy implementation in Sri Lanka. *Sri Lanka Journal of Education*, 14(2), 45–60.

UNICEF. (2018). Education for children in post-conflict areas of Sri Lanka. Colombo: UNICEF.

Wijesooriya, K. (2019). Politics and school administration in Sri Lanka. *Journal of Social Sciences*, 12(3), 78–95.

World Bank. (2020). Transforming school education in Sri Lanka: From cut-score to competency. Washington, DC: World Bank.


## நானும் எவரெஸ்ட்டும்

எவரஸ்ட் எனும் சைக்கிளை ஒரு மாதத்திற்கு முன்னர் எனது அப்பா வாங்கித்தந்தார்

வாங்கிய புதிதில் தனியாக என்னால் ஓட முடியாது வீட்டிலுள்ளவர்கள் பிடித்தால் தான் ஓடுவேன்

இப்போது பாடசாலை விட்டு வந்ததிலிருந்து நிழலில் எவரஸ்ரை ஓடித்திரிவதே எனது பொழுதுபோக்கு

எனது எவரெஸ்ரின் நிறம் சிவப்பு மற்றும் கறுப்பு

எனது அம்சவி அக்காவும் நானும் போட்டி போட்டு சைக்கிள் ஓடுவோம்

வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கு நான் எனது சைக்கிளினை ஓடிக்காட்டிடுவேன்

எனது குட்டி மச்சான் நைநிகனும் வீட்டிற்கு வரும்போது எவரெஸ்ரினை ஓடிப்பார்ப்பான்

எனக்கு எனது எவரெஸ்ட்டினை மிகவும் பிடிக்கும்


ஆ.அபர்சன்
தரம்-01
கிளி/முருகானந்தா ஆரம்பப்பாடசாலை


## மாதராய் பிறப்பதற்கு மாதவம் செய்யவேண்டும்

அரிதுஅரிது மானிடராய்ப் பிறத்தல்
அரிது அதனிலுமரிது பெண்ணாய்ப் பிறத்தல்

வந்தாரை வரவேற்று
வணங்கி விருந்தூட்டும்
செந்தாமரை முகமே
செப்பும் தமிழ்ப்பெண்மை

ஆண்டவன்படைப்பிலே
இவளும் ஓர்அதிசயமே
அடுப்பங்கரை ஆற்றங்கரை
அலைந்தது அன்றே

அயல்நாடு ஆகாயம்
பயணித்தது இன்றே
தாய்நாட்டின் நலன்பேணும்
தாகங்கள் கொண்டவள்

தாய்மைக்கும் பெருமைதர
தரணியில் உதித்தவள்
வீரதீரம் ஆண்களது
வல்லமையென நீயெண்ணி

ஒதுங்கி வாழ்வதெல்லாம்
உனதுபேதமை அறிவாயா
அறிவுத்திறனும் ஆண்களது
விரல்களென எண்ணுவதைமறந்தே

அவற்றினைப்பெறுவதற்காய்
கடுமையாய்
உழைத்திடு பெண்ணே
குலவிளக்காய் இல்லத்தரசியாய் விஞ்ஞானியாய்
நிர்வாகியாய்

பலஅவதாரங்கள் எடுத்தே
சரித்திரங்கள் படைப்பவள்
பெண்கள் எப்போதும்
எம்நாட்டின் கண்கள்

அவர்களதுகண்களிலே
கண்ணீர்சிந்தாது கவனிப்பதே
அனைவரதுகடமையே
உயிர்களை உண்டாக்கி
உவப்புடன் பேணிப்பாதுகாத்தும்

வாழ்நாளெல்லாம் பிறருக்கு
அன்புசெய்யும்
அரும்பெருமைகொண்டவள்
உண்மை உலகறிய
உற்றபணி ஆற்றுபவள்
உலகினில் பெண்மையில்
உயர்வானது ஏதுமில்லையே


ச.துஸ்யன்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

# கல்வி ஆய்வில் குடித்தொகை இடைவெளி

- கலாநிதி சு.பரமானந்தம் -

கல்வியில் குடித்தொகை இடைவெளி என்பது கல்வி ஆய்வு, நடைமுறைகள் அல்லது வாய்ப்புகளில் சில குழுக்கள் அல்லது குடித்தொகையின் பிரதிநிதித்துவம் இல்லாது அல்லது குறைவாக இருப்பதைக் குறிக்கிறது. குறிப்பிட்ட மாணவர் குடித்தொகை, சமூகங்கள் அல்லது கல்வி அமைப்புகள் போதுமான அளவு பிரதிநிதித்துவப் படுத்தப்படாமலோ அல்லது ஆய்வு செய்யப்படாமலோ இது நிகழ்கிறது, இது கல்வி கோட்பாடு, கொள்கை அல்லது நடைமுறையில் அந்தக் குழுக்களுக்கான புரிதல் மற்றும் ஆதரவின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. இந்த இடைவெளிகள் சமூகப் பொருளாதார நிலை, புவியியல் இருப்பிடம், இனம், பாலினம், மொழி, சிறப்புத் தேவைகள் அல்லது பிற தொடர்புடைய பண்புகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

## கல்வியில் குடித்தொகை இடைவெளிகளுக்கான உதாரணங்கள்

1. கல்வி ஆய்வில் கிராமப்புற மாணவர்களின் குறைவான பிரதிநிதித்துவம்

**சூழல்:** கல்வி ஆய்வு பெரும்பாலும் நகர்ப்புற மற்றும் நகரையண்டிய குடித்தொகையில் கவனம் செலுத்துகிறது, கிராமப்புறங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் சவால்களுக்கு குறைந்த கவனம் செலுத்தப்படுகிறது.

**குடித்தொகை இடைவெளி:** கிராமப்புற மாணவர்களின் அனுபவங்கள் நகர்ப்புற அல்லது புறநகர் அமைப்புகளில் உள்ளவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதில் அனுபவ இடைவெளி உள்ளது. உதாரணமாக, தொழில்நுட்பத்தின் பங்கு, வளங்களுக்கான அணுகல் மற்றும் கல்வி விளைவுகளில் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தலின் தாக்கம் ஆகியவை கிராமப்புற மாணவர்கள் போதுமான அளவு குடித்தொகையாக ஆராயப்படாமல் போகலாம்.

2. STEM துறைகளில் சிறப்பு கல்வி மாணவர்கள்

**சூழல்:** STEM (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) கல்வி பல பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் முக்கிய கவனம் செலுத்தும் அணுகுமுறையாக மாறியுள்ளதுடன் மாணவர்களின் பங்கேற்பை அதிகரிக்க பல் வேறுவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. (தற்போது இலங்கையில் STEM இற்குப் பதிலாக STEAM அணுகுமுறையை மேம்படுத்துவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**குடித்தொகை இடைவெளி:** கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்கள் அல்லது விசேட கல்வித் தேவைகள் (SEN) பெரும்பாலும் STEM திட்டங்கள் மற்றும் ஆய்வில் குறைவாகவே பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறார்கள். STEM பாடத்திட்டங்களில் விசேட கல்வி மாணவர்களை எவ்வாறு உள்வாங்குவது மற்றும் ஆதரிப்பது அல்லது இந்த மாணவர்கள் தங்கள் சகாக்களுடன் ஒப்பிடும்போது STEM துறைகளில் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை ஆராயும் ஆய்வுகள் பற்றாக்குறை உள்ளது.

3. கல்வித் தலைமைத்துவத்தில் பாலின வேறுபாடுகள்

**சூழல்:** வரலாற்று ரீதியாக, அதிபர்கள், பணிப்பாளர்கள் அல்லது பல்கலைக்கழக பேராசிரியர்கள் போன்ற கல்வித் தலைமைத்துவ பதவிகள் ஆண்களால் விகிதாசாரமற்ற முறையில் அதிகமாகக் காணப்படுகின்றன.

**குடித்தொகை இடைவெளி:** கல்வியில் தலைமைத்துவ பதவிகளை அடைவதில் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் சவால்களைப் புரிந்துகொள்வதில் இடைவெளி உள்ளது. தலைமைத்துவத்தில் பாலின சமத்துவமின்மை குறித்து சில ஆய்வுகள் இருந்தாலும், கல்வி நிறுவனங்களுக்குள் பாலினம் தலைமைத்துவ பாணிகள், தொழில் முன்னேற்றம் மற்றும் முடிவெடுப்பதை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து இன்னும் போதுமான ஆய்வுகள் இல்லை.

4. உயர்கல்வியில் ஆங்கில மொழி கற்பவர்கள் (ELLfs)

**சூழல்:** பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில், குறிப்பாக ஆங்கிலம் தாய்மொழியாக அல்லாத நாடுகளில், ஆங்கில மொழி கற்பவர்களின் (ELLfs) எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**குடித்தொகை இடைவெளி:** உயர் கல்வியில் ELLfs, குறித்து அதிக ஆய்வு கவனம் செலுத்தியிருந்தாலும், உயர்கல்வியில் ELLfs, எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் புரிந்துகொள்வதில் குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது. பல்கலைக் கழகங்கள் ELLfsகளை எவ்வாறு சிறப்பாக

அமுலாக்க முடியும் என்பதை ஆராய ஆய்வுகள் தேவை, குறிப்பாக கல்வி எழுத்து, வாசிப்பு புரிதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் இவ்வாறான ஆய்வகள் அவசியமாகின்றது.

5. திறமையான கல்வித் திட்டங்களில் இன சிறுபான்மை மாணவர்கள்

**சூழல்:** திறமையான மற்றும் திறமையான கல்வித் திட்டங்கள் உயர் சாதிக்கும் மாணவர்களுக்கு சவாலான மற்றும் வளப்படுத்தும் வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன, ஆனால் இந்தத் திட்டங்கள் வரலாற்று ரீதியாக இன சிறுபான்மை மாணவர்களால் குறைவாகவே பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன.

**குடித்தொகை இடைவெளி:** திறமையான திட்டங் களில் இன சிறுபான்மை மாணவர்கள், குறிப்பாக கருப்பு, ஹிஸ்பானிக் மற்றும் பூர்வீக அமெரிக்க மாணவர்களின் குறைவான பிரதிநிதித்துவம் குறித்த ஆராய்ச்சி குறைவு. புரிதலில் உள்ள இந்த இடை வெளி கொள்கை பரிந்துரைகளையும், பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த திறமையான மாணவர் களுக்கு மிகவும் உள்ளடக்கிய அடையாளம் மற்றும் ஆதரவு அமைப்புகளின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

### கல்வியில் மக்கள்தொகை இடைவெளிகளை எவ்வாறு கண்டறிவது

- கல்வி விளைவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பகுப்பாய்வு செய்யுங்கள்: சில மாணவர் மக்கள் தொடர்ந்து குறைவாகச் செயல்படும் அல்லது மற்றவர்களை விட அதிக சவால்களை எதிர் கொள்ளும் பகுதிகளை அடையாளம் காணவும். இது குறைவான பிரதிநிதித்துவம் பெற்ற அல்லது கவனிக்கப்படாத மக்கள்தொகையை முன்னிலைப் படுத்தலாம்.
- தற்போதுள்ள ஆய்வுகளை மதிப்பாய்வு செய் யவும்: சில குடித்தொகை எங்கு புறக்கணிக்கப்பட்டது அல்லது குறைவாக ஆராயப்பட்டது என்பதைக் கண்டறிய இலக்கியத்தின் முழுமையான மதிப்பாய்வை மேற்கொள்ளவும். ஒரு குறிப்பிட்ட கல்விச் சூழலில் (எ.கா., STEM இல் கிராமப்புற மாணவர்கள்) ஒரு குறிப்பிட்ட குழு போதுமான அளவு ஆய்வு செய்யப்படவில்லை என்றால், அது குடித்தொகை இடைவெளியைக் குறிக்கலாம்.
- பயிற்சியாளர்களுடன் கலந்தாலோசிக்கவும்: ஆசிரியர்கள், நிர்வாகிகள் மற்றும் கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் பெரும்பாலும் சில மக்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய நேரடி அறிவைக் கொண்டுள்ளனர். அவர்களின் நுண்ணறிவுகள் ஆராய்ச்சி மற்றும் நடைமுறை யில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய உதவும்.
- வளர்ந்து வரும் போக்குகளைப் பாருங்கள்: புதிய கல்விப் போக்குகள் (எ.கா., டிஜிட்டல் கற்றல், அகதிகள் அல்லது புலம்பெயர்ந்த மக்களைச் சேர்ப்பது) குறிப்பிட்ட மக்களுக்கான ஆராய்ச்சி மற்றும் ஆதரவு இன்னும் இல்லாத பகுதிகளை முன்னிலைப்படுத்தலாம்.


### கல்வியில் குடித்தொகை இடைவெளிகளை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவம்:

**சமத்துவம்:** குடித்தொகை இடைவெளிகளைக் கண்ட றிந்து நிவர்த்தி செய்வது அனைத்து மாணவர்களு க்கும் சமமான கல்வி வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும், பிரதிநிதித்துவம் இல்லாத குழுக்கள் வெற்றிபெறத் தேவையான ஆதரவையும் கவனத்தையும் பெறு வதை உறுதி செய்யும்.

**உள்ளடக்கிய கல்வி:** குடித்தொகை இடைவெளி களை ஆராய்ந்து நிவர்த்தி செய்வதன் மூலம், கல்வி நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை மேலும் உள்ளடக்கியதாகவும், பயனளிக்கும் வகையிலும் மாற்ற முடியும்.

கல்வியில் குடித்தொகை இடைவெளி என்பது கல்வி ஆய்வு, நடைமுறைகள் அல்லது வாய்ப்பு களில் சில குழுக்கள் அல்லது குடித்தொகையின் பிரதிநிதித்துவம் இல்லாது அல்லது குறைவாக இருப்பதைக் குறிக்கிறது. குறிப்பிட்ட மாணவர் குடித்தொகை, சமூகங்கள் அல்லது கல்வி அமைப் புகள் போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப் படாமலோ அல்லது ஆய்வு செய்யப்படாமலோ இது நிகழ்கிறது, இது கல்வி கோட்பாடு, கொள்கை அல்லது நடைமுறையில் அந்தக் குழுக்களுக்கான புரிதல் மற்றும் ஆதரவின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. இந்த இடைவெளிகள் சமூகப் பொருளாதார நிலை, புவியியல் இருப்பிடம், இனம், பாலினம், மொழி, சிறப்புத் தேவைகள் அல்லது பிற தொடர்புடைய பண்புகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

***




# சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும்

7

- கலாநிதி கி.புண்ணியமூர்த்தி LLB-

## உயர் கல்வி

இலங்கையில் உயர் கல்வி மறுசீரமைப்பு மற்றும் இதற்கான கொள்கை உருவாக்கம் குறித்துத் தற்போது அதிகம் பேசப்பட்டு வருகின்றது. இலங்கையில் 17 அரச பல்கலைக்கழங்கள் இருக்கின்றன. 104 வருடம் பழமையான கொழும்புப் பல்கலைக்கழகமும் மூன்று வருடங்கள் மட்டுமே யான வவுனியா பல்கலைக்கழகமும் இவற்றுள் அடங்கும். இந்தப் பல்கலைக்கழங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டியுள்ளது. குறைந்தபட்சம் 2030ஆம் ஆண்டாவது பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழங்களாக இவற்றைத் தரமுயர்த்த வேண்டும். பிராந்தியத்தில் சிறந்த கல்வி மையமாக இலங்கையை உருவாக்குவதற்கான திட்டத்தை வகுத்து அதனை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கையில் அனைத்து மாணவர் களுக்கும் உயர் கல்வி பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அது அரச கல்வியா?, தனியார் கல்வியா?, பட்டப்படிப்பா?, தொழில்நுட்பக் கல்வியா? என்ற தீர்மானத்திற்கு பின்னர் வரலாம். எனினும், அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அரச தலைவர்கள் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் வகையிலும், புத்தாக்க அடிப்படையிலும், எதிர்காலப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தூரநோக்குடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மாணவர்களை உருவாக்கும் வகையிலும் இலங்கையின் உயர்கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத் தப்பட வேண்டும். இதற்கான கல்வி மறுசீரமைப்பு, கொள்கை உருவாக்கம் குறித்து விரிவாக பேச்சு நடத்தப்பட்டு அது முறையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இதேவேளை, சர்வதேச பல்கலைக்கழகங்கள் சிலவற்றை இலங்கையில் திறப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பிராந்தியத்தில் சிறந்த உயர் கல்வியை வழங்கும் மையமாக இலங்கையை மாற்ற வேண்டும். இதன்மூலம் மாலைதீவு, சீனா, தாய்லாந்து, இந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள மாணவர்களை இலங்கைக்கு ஈர்க்க முடியும். தமிழ் நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கான ஆகிய மாநிலங்களில் உள்ள மாணவர்கள் டெல்லிக்குச் செல்வதைவிட இலங்கையில் உயர் கல்வியை மேற்கொள்வது இலகுவாக இருக்கும். கல்வி, கலாசாரம் அனைத்தும் இங்கு ஒன்றாகவே இருக்கிறது. இந்த மாநிலங்களில் 2030ஆம் ஆண்டு 3.5 பில்லியன் சனத் தொகை இருக்கும். அங்கு பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. இந்த சந்தையை நாம் இலக்குவைக்க வேண்டும். அங்குள்ள மாணவர்களை ஈர்க்கும் வகையில் உயர் கல்வித் துறையை மேம்படுத்த வேண்டும்.

எமது கல்வியைச் சர்வதேச தரத்துக்கு நகர்த்திச் செல்வதென்பது பெரும் சவால்கள் நிறைந்த முயற்சியாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நாட்டிற்கு இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபோது சுமார் 6 மில்லியன் மக்கள் தொகையில் 4 லட்சம் மாணவர்களே இருந்தனர். ஆனால் இன்று 4.3 மில்லியன் மாணவர்கள் இருக்கின்றனர். சுதந்திரம் பெறும்போது டொலரின் பெறுமதி 2 ரூபா 10 சதமாக இருந்தது. தற்போதிருக்கும் டொலரின் பெறுமதியைப் பாருங் கள். எமது பொருளாதாரம் சுருங்கிச் சென்ற போதிலும் கல்வித்துறையின் கேள்வி அதிகரித்து ள்ளது. இந்த இடைவெளியினால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். 2030 ஆம் ஆண்டாகும் போதாவது சர்வதேசத்துடன் போட்டிப் போடக் கூடிய மாணவர்களை உருவாக்க முயற்சித்தல் வேண்டும்.

கல்வித் துறையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. பல மாணவச் சங்கங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கல்வி குறித்தும், சமகால உலகு குறித்தும் பல்வேறுபட்ட கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையில்தான் கல்வி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் மாற்றத்தைக் கொண்டுவருவது மிகக் கடினமானது எனக் கல்வியியலாளர்களில் பலர் கருதுகின்றனர். அநேகமான பெற்றோர்கள், கல்வித் துறை (Academic stream) ஊடாகவே தமது பிள்ளைகளுக்கு, உயர் கல்வியைக் கற்பிக்க முயற்சிக்கின்றனர். இவர்கள் தொழிநுட்பத் துறையையோ (Technology Stream) தொழில் துறையையோ (Vocational stream) விரும்புவதில்லை. பெற்றோரது இந்த மனப்பாங்கே இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாகும். அன்று இலவசக் கல்வியின் தந்தையான CWW கன்னங்கரா அவர்கள் **கந்தெஸ்ஸ** பாடசாலை முறையினூடாகத் தொழில் துறைக் கல்வியை அறிமுகப்படுத்திய வேளையில் பெற்றோரின் இந்த மனப்பாங்கே அது தோல்வி அடையப் பிரதான காரணமாக அமைந்தது. அதேவேளை இந்தியாவில் மகாத்மா காந்தி அறிமுகப்படுத்திய **நைதாலிம்** என்னும் கல்வி முறைமையும் அவரது "வார்தா" மாதிரிப் பாடசாலை முறைமையும் வெற்றிபெற்றது. அதேபோல் தன்சானியாவில் **யூலியஸ் நியரரே** உஜம்மா குடியேற்றத்தில் அறிமுகப்படுத்திய கிராம எழுச்சி வேலைத்திட்டம் (Villagization) வெற்றி பெற்றது.

1960 களில் தன்சானியா உலகிலுள்ள மிகவும் மோசமான வறிய நாடுகளில் ஒன்றாகக் காணப்பட்டது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை அந்த நாடு எதிர்நோக்கியது இதற்காக நியரரே முன்வைத்த தீர்வுகள் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தல், கிராம எழுச்சி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (Villagization) என்பன போன்றவையாக அமைந்திருந்தன. இச் செயற்பாடுகள் மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த விசேடமான கலப்பாக உருவாக்கம் பெற்றன.

சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு முன்னர் ஒவ்வொரு பிரஜையையும் மிகக் குறைந்த மட்டத்திலாவது வாழச் செய்தல் வேண்டும் என்பதும் அவர்களது அடிப்படை சுகாதார வசதிகளை விருத்தி செய்தல் வேண்டும் என்பதுமே நியரரேயின் அடிப்படைக் குறிக்கோள்களாக இருந்தன. இதனைக் கல்வியினூடாகச் சாதிக்கவே அவர் முயற்சி செய்தார்.

**உஜம்மா** குடியேற்றத்தின் நோக்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் (Family hood) தன்சானியாவைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஒப்படைப்பதாகும். நியரரேயின் குறிக்கோள்களான

1. சுய ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலைக் கல்வியையும், வளர்ந்தோர் கல்வியையும் விருத்தி செய்தல்.
2. வாழ்க்கை நீடித்த கல்வியும், விடுதலை தொடர்பான கல்வியும் வழங்கப்படுதல்.

ஆகியவற்றை நாமும் முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

யூலியஸ் நியரரே முறைசார் கல்வி தொடர்பாகப் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்

1. முறைசார்கல்வி வசதிபடைத்தவர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்தக் கல்வி வைத்தியர்களையும் ,பொறியியலாளர்களையும், சட்டத்தரணிகளையும் உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
2. நடைமுறையிலுள்ள கல்வி முறைமை அதில் பங்குபற்றுபவர்களை சமூகத்திலிருந்து வெகு தூரத்துக்குத் தள்ளிவைக்கின்றது.
3. கல்வி என்பது முறைசார் பாடசாலைக்குச் செல்லுதல் என்னும் கருத்தையே சமூகத்தில் தோற்றுவித்துள்ளது. மனிதர்களின் திறனையும், ஆற்றலையும் அளப்பது பரீட்சைகளில் வெற்றியடைவதிலும், சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலுமே தங்கியுள்ளது.
4. தற்போது நடைமுறையிலுள்ள முறையியல்களில் கல்வி கற்கும் மாணவர்கள் விளைதிறன் மிகு உற்பத்திச் செயன்முறைகளில் பங்குபற்ற முடியாதவர்களாகவேயுள்ளனர். தேசிய பொருளாதார விருத்திக்கு இந்த நாட்டின் கல்வி பங்களிப்புச் செய்யாது என்பதையே இது காட்டுகின்றது. உடலுழைப்புத் தொடர்பாக மாணவர்களிடம் மிகக் குறைந்த மட்டத்திலான மனப்பாங்கே காணப்படுகின்றது.
5. எமது ஆரம்பப் பாடசாலைக் கல்வி மாணவர்களை இடைநிலைப் பாடசாலைகளுக்குத் தயார்ப்படுத்துவதாகவேயுள்ளது.

மேற்கூறப்பட்ட நியரரேயின் கருத்துக்கள் இன்றைய இலங்கையைப் பிரதிபலித்துக் காட்டுவது போலவே அமைந்துள்ளன. உடலுழைப்புத் தொடர் பான கவனம் மாணவர்கள் மத்தியில் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது பெருமளவு பாட சாலை மாணவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதே இதற்கு எடுத்துக்காட்டாகும். மாணவர்கள் ஓய்வொ ழிச்சலின்றியும், விளையாட்டுச் செயற்பாடுகளின் றியும் பாடநூல்களை மனனம் செய்வதிலேயே தமது காலத்தைக் கழிக்கின்றனர்.

நியரரே கல்வி, சுய நம்பிக்கையைக் (Educaion for Self reliance) கட்டியெழுப்புவதாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகவும், கூட்டுறவை விருத்தி செய்வதாகவும் அமைதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். இதற்காக அவர் பின்வரும் சிபார்சு களைச் செய்துள்ளார்

1. கல்வியைக் கிராமிய வாழ்க்கைக்குப் பொருத்த மானவாறு மாற்றியமைத்தல் வேண்டும்.
2. ஆசிரியர்களும் மாணவர்களும் விளைதிறன்மிகு செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இச் செயற்பாடுகளைத் திட்டமிடும்போதும் ஒழுங்க மைக்கும் போதும் மாணவர்கள் பங்குபற்றுதல் வேண்டும்.
3. பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைப்பாட விதானச் செயற்பாடுகளாக ஆக்கச் செயற்பாடு கள் இடம்பெறுதல் வேண்டும்.
4. பரீட்சைகளுக்கான முக்கியத்துவத்தைக் குறைத் தல் வேண்டும்
5. ஆரம்பக்கல்வி, இடைநிலை வகுப்புகளுக்கான பிரவேசத்துக்காக மாணவர்களைத் தயார்ப்படுத் துவதாக மாத்திரம் அமைதல் கூடாது. மாணவர் களின் சுய நம்பிக்கையையும், கூட்டுறவாகக் கல்வி கற்கும் நடத்தையையும் விருத்தி செய்யும் அதேவேளை அவர்களை விமர்சன ரீதியாகக் கற்பவர்களாக மாற்றுதல் வேண்டும். இவற்றை நாமும் நமக்குரியதாக மாற்றலாம்.

இலங்கையில் அண்மைக்காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட 13 வருட உத்தரவாதக் கல்வி முறை இன்று தோல்வியடைந்திருப்பதற்கும் பெற்றோரின் கல்வி தொடர்பான புலக்காட்சியே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. உயர் கல்வி தொடர் பான தனியார் துறை வகுப்புக்களின் சந்தை மட்டும் 65 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இதற்கான பொது ஒழுங்குபடுத்தல் எதுவும் இல்லை. சுமார் 50 ஆயிரம் ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடத்துகின்றனர். இவர்களில் முழு நேர, பகுதி நேர ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் எவ்வித ஒழுங்குபடுத்தலும் இல்லை. இதனையும் ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது.

நாட்டில் சமீபத்தில் உள்ள பிரச்சினை களுக்குத் தீர்வுகாணக் கூடியவர்களும், எதிர்காலப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொலை நோக்குப் பார்வையுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடியவர்களும் எமது பல்கலைக்கழகங் களில் உருவாக்கப்பட வேண்டும். புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பேராசிரியர்களை அவர்களது விடுமுறை காலங்களிலாவது மீளவும் இலங்கைக்கு அழைத்துவந்து நமது பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும். அவர்களுக்கு வெளிநாடுகளில் வழங்கும் கொடுப் பனவுகளை வழங்க முடியாவிட்டாலும், அவர்களுக் கான சலுகைகளை வழங்கலாம். இதன்மூலம் சர்வதேச தரத்திற்கு எமது பல்கலைக்கழக விரிவுரைகளை தரமுயர்த்த முடியும்.” சர்வதேச தரவரிசையில் எமது பல்கலைக்கழங்களை தேடிப் பாருங்கள். எமது பல்கலைக்கழகங்கள் ஒன்றாவது இடம்பிடித்துள்ளதா? இலங்கையில் 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்புப் பல்கலைக் கழகம் இலங்கையில் முதலாமிடத்திலும் பிராந்தியத் தில் 470 ஆவது இடத்திலும் சர்வதேசத்தில் 1643ஆவது இடத்திலும் உள்ளது. 1942ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கையில் இரண்டாமிடத்திலும் பிராந்தியத்தில் 557 ஆவது இடத்திலும் சர்வதேசத்தில் 1879 ஆவது இடத்திலும் உள்ளது. 1974ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை யில் 07 ஆவது இடத்திலும் பிராந்தியத்தில் 2535 ஆவது இடத்திலும் சர்வதேசத்தில் 6007ஆவது இடத்திலும் உள்ளது. 1981ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் இலங்கை யில் 16ஆவது இடத்திலும் பிராந்தியத்தில் 3225 ஆவது இடத்திலும் சர்வதேசத்தில் 7386 ஆவது இடத்திலும் உள்ளது. 1995ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை யில் 14 ஆவது இடத்திலும் பிராந்தியத்தில் 2369ஆவது இடத்திலும் சர்வதேசத்தில் 5778 ஆவது இடத்திலும் உள்ளது. முதலில் பிராந்திய ரீதியில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சிறந்த பல்கலைக் கழகம் என்ற இடத்திற்கு வர வேண்டும்.

தொடரும்...

## அம்மா...

அன்பெனும் பளிங்கைக் கொண்டு
பக்குவமாய் செதுக்கி செய்த
கருவறை எனும் கோவிலில்
உன் தோல் போர்த்தி
இரு உயிர் ஓர் மூச்சினில் சுவாசிக்க
உன் உடல் குருதி தனில் இரு உயிர் வாழ்ந்திட
ஓர் உடல் இரு உயிரென இன்றி
நீயே நானாக பத்தியமாய் காத்தவளே!
தன் உருவம் தனை தானே தழுவி அணைத்திட
நீ செய்த தவத்தினால் உம் கோவில் படியேறி
உருக்கொண்டேனோ!
உன் விழி நனைகையில் என் விழி நனைத்து
அம்மா..... என்றிட அவதறித்தேனோ!
உன் இரத்தத்தை பாலாக்கி தந்து
தவழ்கையில் நீயே! தரையாகி
நடை பழக பாதம் இரெண்டென மாறி
பள்ளிப்பருவமதில் கால் இரண்டும் பதம் பார்க்க



காவல் காத்து நின்றாயே! அம்மா....
நீங்கள் செய்த தவத்தினின் பயன் நானே!
தாயே! வாழ்க்கையின் முடிவு தனை காலம்
காட்டுகையில்
உனக்கு தாயென நான் காத்து நின்றிட
மடியேந்தி கேற்கும் வரம் தந்திடுவானோ!
இறைவன்
மகளே! தாயாகும் வரம்.

**பன்னீர்செல்வம் லெட்சுமி**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

## A Day with Clouds

When I was seven years old,
I went in an aeroplane.
Suddenly, I fell down from it,
and I got caught by the clouds.

The clouds began to talk with me
they told me some jokes
and shared their adventures.
We talked very happily!

The clouds started to sleep,
so I touched a cloud
and plucked its skin.
It was so soft, just like candy floss.

I heard a voice, "Zara, wake up",
it's 6 O'clock.
I woke up from my bed
and realized it was just a dream!!

**M. Sasthika**
Grade 5 B
Bishop's College,Colombo 03.

## ஆண் தேவதை

பெற்றவள் உயிர் பாதியிலே பிரிந்திருக்க
மற்றவர் வந்து வீண் பழி சொல்லாதிருக்க
சொற்ப வேளை கூட பிரியாமல் என்னை -
அழகிய
சிற்பமாய் மிளிரச் செய்த என் தந்தை
அன்புச்சிறகுகள் கொண்டு அரவணைத்திடும்
அழகிய ஆண்தேவதை.


**- Keerththana Sivalingarasa -**

## சலங்கை ஒலி

கால்கொலுசோடு சலங்கையும் ஒலி எழுப்பிடுமே
பரதத்தின் பாங்குதனை பாதங்கள் ஆடிடுமே
விரல்களில் அபிநயங்கள் கொண்டிங்கு
ஆடிடுவாள்
முகமதில் நவரசமும் ஒருங்கே கொண்டிடுவாள்
இடைதனில் சிருங்கார நடனம் மிளிர்ந்திடுமே
கால்களில் மங்கையின் மயக்கும் நடனமே
பாரதத்தின் பாரம்பரிய ஆடல்கலை
இதுவன்றோ பரதத்தைக் கற்றே பண்பாட்டை
வளர்த்திடுவோமே...

**அ.ர.ஜெயதீபன் (மடுவன்)**

# Dhora 'WIN' வரிகள்



முள்ளம்பன்றிகள் காட்டில் வாழ வேண்டு மென்றால் முட்கள் எப்படி அவசியமாகிறதோ அதே போன்று நீ இப் பூமியில் வாழவேண்டும் என்றால் படிப்பும் திறமையும் ஒவ்வொருத்தரும் தன்னகத்தே தக்கவைத்திருந்தே ஆக வேண்டும். நிறைய காசு சேர்க்கவும் செல்வம் மிக்கவரக இருப்பதற்கும் தான் படிப்பு வேண்டுமா என்று கேட்டால் தற்போது நிலவரப்படி பிச்சைகாரன் தான் நிறைய உழைக்கிறான் நிறைய சேமிக்கலாம். ஏனென்றால் இவ்வுலகத்தின் பார்வையில் அவன் ஏழை. அவனிடம் தன்னை விட உயர்ந்த ஒரு செல்வமும் இல்லை. எனவே அவன் தனது உணவு உறையுள் உடை இவையெல்லாம் சாதாரணமாகவும் அழுக்காகவும் பழையதாகவும் தான் பயன்படுத்துகின்றனர்.

எனவே அவர்கள் மீதான கரிசனை அடக்கு முறைக்கு உட்பட்டது. அவன் நல்ல உடை உடுத்தி யாசகம் கேட்டால் அதனை தரமறுக்கும் சிறிய மனம் படைத்த மா மனிதர்களுடன் தான் இங்கு நாம் வசிக்கின்றோம். ஏன் என்றால், இந்த சமூகத்தை பொறுத்த வரையும் தான் குடுக்கிற இடத்திலையும் நீ வாங்கிற இடத்திலையும் இருக்கிற வரையும் உன்னட்ட பிரச்சனைக்கே வராது எப்ப நீ அவன விட ஒருபடி மேல வருவதாய் தோன்றுகிறதோ அன்றிலிருந்து வெளிப்படையா இல்லாட்டியும் மறைமுகமா உனக்கெதிராக அவர் எண்ணம் மாற்றமடையும். இது தவறு சரி என்பதற்கு அப்பால் இது யதார்த்த நிலை. நீ செல்வ நிலையில் உயர்ந்த இடத்தை அடைந்த பின் அதனை தக்கவைக்க முள்ளம் பன்றியின் முட்கள் போன்ற ஆயுதம் தேவை. அது தான் கல்வி அந்த கல்வியறிவும் திறமையும் உனக்கு ஒவ்வொரு பிரச்சினை வரும்போதும் நீ சரியான தீர்மானமெடுத்து சுயமா உன்னையும் உன்னைசார்ந்திருப்பவரையும் பாதுக்க தன்னம்பிக்கை தருவதே கல்வியறிவும் திறமையும்தான்.


இப்ப நீங்க ஒவ்வொருத்தரும் உங்களையும் உங்களை விட கல்வி மட்டம் குறைந்த செல்வந்தனையும் ஒப்பிட்டு சிந்தியுங்கள் யாரை இவ்வுலகம் நன்மதிப்புடன் நோக்குகிறது? யாரை இலகுவாக பயன்படுத்திவிட்டு தூக்கியெறிய முயல்கிறது? என்பதன் பதில் கூறும் என் எழுத்துக்களில் உள்ள கருத்தின் பொருளின் உண்மையை

**- டயானா சிவராஜா -**

# Digital learning transformation

**திருமதி பொன்ராஜ் நித்யவினோதினி**
கல்வி முதுமாணி கற்கைநெறி – XV அணி
உயர்பட்ட படிப்புகள் பீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

டிஜிட்டல் கற்றல் மாற்றம் என்பது கல்வி மற்றும் பயிற்சியில் புரட்சியை ஏற்படுத்த டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதை உள்ளடக் கியது, உள்ளடக்கத்தை டிஜிட்டல் மயமாக்குவதை கடந்து, கற்றல் எவ்வாறு வழங்கப்படுகிறது, அனுபவம் வாய்ந்தது மற்றும் நிர்வகிக்கப்படுகிறது என்பதனை அடிப்படையில் மாற்றுவது நோக்காகக் கொண்டது. இந்த மாற்றம் கல்வி செயல்முறைகளில் செயல்திறன், அணுகல், தனிப்பயனாக்கம் மற்றும் ஊடாடும் தன்மையை மேம்படுத்துவதை நோக்க மாகக் கொண்டுள்ளது, இது தனிபயனாக்கப்பட்ட மாணவர்களிடமிருந்து தனிநபர்களை செல்வாக்கு செலுத்துகிறது.



## கல்வியில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை UNESCO ஏன் முக்கியமாகக் கருதுகிறது?

கல்வியை ஒரு அடிப்படை மனித உரிமையாக உறுதி செய்வதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் (Digital technology) ஒரு சமூகத் தேவையாக மாறியுள்ளது, குறிப்பாக அடிக்கடி நெருக்கடிகள் மற்றும் மோதல்களை அனுபவிக்கும் உலகில். COVID-19 தொற்றுநோய் காலத்தில், போதுமான ICT உள் கட்டமைப்பு மற்றும் நன்கு வளப்படுத்தப்பட்ட டிஜிட்டல் கற்றல் அமைப்புகள் இல்லாத நாடுகள் மிகப் பெரிய கல்வி இடையூறுகளையும் கற்றல் இழப்புகளையும் சந்தித்தன. இந்த சூழ்நிலை உலகெங்கிலும் உள்ள மூன்றில் ஒரு பங்கு மாணவர்களை ஒரு வருடத்திற்கும் மேலாக பாடசாலைகள் மூடல்களின் போது கற்றலுக்கான அணுகலை இழந்தது. COVID-19 கல்வி இடையூறு, பாடசாலைக்கல்வி மாதிரிகளை மாற்றுவதற்கும், உள்ளடக்கிய, திறந்த மற்றும் மீள்தன்மை கொண்ட கற்றல் அமைப்புகளை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் மனித வளங்களை ஒன்றிணைப்பதற்கான அவசரத் தேவையை தெளிவாக வெளிப்படுத்தியது. கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துதல், கற்றலின் பொருத்தத்தையும் தரத்தையும் மேம்படுத்துதல் ICT மேம்படுத்தப்பட்ட வாழ்நாள் கற்றல் பாதைகளை உருவாக்குதல், கல்வி மற்றும் கற்றல் முகாமைத்துவ அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் கற்றல் செயன்முறைகளை கண்காணித்தல் ஆகியவற்றில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதை யுனெஸ்கோ ஆதரிக்கிறது. இந்த இலக்குகளை அடைய, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்டு டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் டிஜிட்டல் திறன்களை வளர்க்க UNESCO செயல்படுகிறது.




## DLTக்கான யுனெஸ்கோவின் (UNESCO) அணுகுமுறை என்ன?

சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் கட்டமைப்புகளுக்கு ஏற்ப மக்களுக்கு சேவை செய்யும் வகையில் தொழில்நுட்பம் வடிவமைக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், SDG 4 - கல்வி 2030ஐ அடைவதற்கும், 2030க்கு அப்பால் கல்வியின் பகிரப்பட்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஒரு பொதுவான நன்மையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் யுனெஸ்கோ ஒரு மனிதாபிமான அணுகுமுறையை முன்னெடுக்கிறது. பெண்கள், குறைந்த வருமானம் கொண்ட குழுக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மொழியியல் மற்றும் கலாச்சார சிறுபான்மை சமூகங்கள் உள்ளிட்ட பெரும்பாலான ஓரங்கட்டப்பட்ட குழுக்களை மையமாகக் கொண்டு டிஜிட்டல் உள்ளடக்கத்தை யுனெஸ்கோ ஊக்குவிக்கிறது. 2015 கிங்டாவ் பிரகடனம் மற்றும் 2017 கிங்டாவ் அறிக்கை, திறந்த கல்வி வளங்கள் குறித்த 2019 பரிந்துரை, AI மற்றும் கல்வி குறித்த 2019 பெய்ஜிங் ஒருமித்த கருத்து மற்றும் கல்வியில் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு குறித்த 2021 UNESCO Strategy (2022-2025) ஆகியவற்றில் திட்டமிடப்பட்டதன் படி, கல்வி இலக்கை நோக்கி முன்னேற்றத்தை விரைவுபடுத்த தொழில்நுட்பம் வகிக்கக்கூடிய பங்கை நாடுகள் புரிந்து கொள்ள உதவும் சர்வதேச முயற்சிகளை யுனெஸ்கோ வழிநடத்துகிறது. யுனெஸ்கோ அதன் உறுப்பு நாடுகளை டிஜிட்டல் கற்றலில் பயனுள்ள தேசிய கொள்கைகள் மற்றும் மாஸ்டர் பிளான்களை வடிவமைத்து, ஒருங்கிணைத்து செயல்படுத்த உதவுகிறது. இதன் மூலம், ஒவ்வொரு நாட்டின் மற்றும் சமூகத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில், பின்தங்கிய மக்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துகிறது.

கல்வியில் ICT கான வழிகாட்டுதல்கள் மற்றும் Master Plans செயற்கை நுண்ணறிவு மற்றும் கல்வி: கொள்கை வகுப்பாளர்களுக்கான வழிகாட்டுதல், திறந்த கல்வி வளக் கொள்கைகளை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்கள், ஆசிரியர்களுக்கான யுனெஸ்கோ ICT திறன் கட்டமைப்பு (ICT-CFT), K-12 AI curricula: A mapping of government-endorsed AI curricula, and the UNESCO Guidance for teachers on distance learning. It also promote grass-rooted best practices through the UNESCO King Hamad Bin Isa Al-Khalifa Prize for the use of ICT in Education, best practices on OER, இல் சிறந்த நடைமுறைகள், மொபைல் கற்றலில் சிறந்த நடைமுறைகள் மற்றும் AI மற்றும் கல்வி ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகளை இது ஊக்குவிக்கிறது. இறுதியாக, யுனெஸ்கோ மொபைல் கற்றல் வாரம் மற்றும் AI

மற்றும் கல்வி குறித்த சர்வதேச மன்றம் உள்ளிட்ட சர்வதேச மாநாடுகளை ஏற்பாடு செய்கிறது.

## திறந்த கல்வி வளங்கள் (Open Educational Resources) என்றால் என்ன?


திறந்த கல்வி வளங்கள் (OER) என்பது அனைவருக்கும் இலவசமாக அணுகக்கூடிய கற்பித்தல், கற்றல் அல்லது ஆய்வு வளங்கள் ஆகும். யுனெஸ்கோ அவற்றின் மேம்பாடு மற்றும் பயன்பாட்டை ஆதரிக்கிறது, மேலும் அவற்றின் பயன்பாடு மற்றும் தாக்கத்தை கண்காணிக்கவும் மதிப்பிடவும் குறிகாட்டிகளைஉருவாக்குவதற்கான பணிகளை மேற்கொள்கிறது,இது தேசிய OER கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.

UNESCO developed and adopted international consensuses and instruments including The Paris OER Declaration 2012 and UNESCO Recommendation on OER, as well as provides guidelines on the development of OER policies, and provides technical support for Member States to develop strategies on adopting OER. The Organization also cooperates with partners on providing openly available and high-quality reading resources to children in the language they speak at home through the Global Digital Library and Translate a Story campaign.

## "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 30

### கதைகளால் நியமாகி...

### தூசுகளை தட்டி விடுங்கள்



சாதாரண மனிதராக அமெரிக்காவிற்கு வந்து இரும்புத்தொழிலில் ஈடுபட்டு அமெரிக்காவின் மிகப்பெரிய கோடீஸ்வரராக திகழ்ந்தவர் ஆண்ட்ரூ கார்னகி. ஒருமுறை ஆண்ட்ரூ கார்னகியிடம் அதிகம் முன்னேறாத தொழிலதிபர் ஒருவர் வந்தார்.

"நானும் இந்த தொழிலில்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் உங்களிடம் மட்டும் வெற்றி குவிகிறது எப்படி? என்று கேட்டார்.

"என்னிடம் திறமையான தொழிலாளர்களும் அதிகாரிகளும் இருக்கின்றார்கள். அவர்களால் உற்பத்தி திறன் பெருகுகிறது" என்று பதில் சொன்னார் ஆண்ட்ரூ.

"அது எப்படி உங்களுக்கு மட்டும் திறமையானவர்கள் கிடைக்கின்றார்கள்? எனக்கு திறமையா னவர்கள் கிடைக்கமாட்டேன் என்கிறார்களே?"

"திறமையானவர்களை தேடுவதைவிட நம்மிடம் இருப்பவர்களிடம் உள்ள திறமைகளை கண்டு பிடிப்பதில் தான் சாமர்த்தியம் இருக்கிறது" என்றார்.

"எப்படி?" என்றார் வந்தவர்.

"தங்க சுரங்கத்தில் வேலை செய்பவர்களை கவனித்தால் ஒரு விடயம் தெரியும். அவர்கள் தங்கத்தை தான் தேடுவார்கள் அதைத் தேடும் பொழுது வரும் மண் தூசு போன்றவற்றை பொருட்படுத்த மாட்டார்கள். அதுபோல் நானும் என்னிடம் வேலை பார்ப்பவர்களிடம் தங்கத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறேன் தூசிகளை தட்டி விடுகிறேன்" என்று பதிலளித்தார் ஆண்ட்ரூ.


**நீதி - நல்லதைத் தேடினால் தான் நல்லது கிடைக்கும்.**

# உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள்

- S.Zeemeennaj -

3

ஓவியம் கண்ணெதிரே கண்ட காட்சிகளுக்கும் கனவில் தோன்றும் கற்பனை உருவங்களுக்கும் தூரிகைக் கொண்டு உயிர் கொடுக்கும் அதி அற்புதமான கலை நாம் இன்று அழகியல் சார்ந்த செயற்பாடாக பார்க்கப்படும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரபலமான ஓவியர்களால் பல ரகசியங்களையும் மர்மங்களையும் கலந்து வைக்கும் கலையாகவே இது காணப்பட்டது. அந்த வகையில் பிரபலமான ஓவியங்களில் மறைந்திருக்கும் நம்ப முடியாத மற்றுமொரு மர்மத்தைப் பற்றி பார்க்கலாம்.....



வின்சென்ட் வான்கோவின் (Vincent Van Gogh) "Cafe Terrace At Night" ஓவியம், 19ம் நூற்றாண்டின் மிக முக்கியமான ஓவியர்களில் ஒருவர் வான்கோ ஆவார். இவரின் வாழ்க்கையே மிகவும் விசித்திரமாக காணப்பட்டது. மேலும் வாழ்நாள் முழுக்க இவர் அன்புக்கு எங்கும் ஒரு நபராக காணப்பட்டார். வாழ்நாள் முழுக்க கஷ்டப்பட்டு வறுமையில் வாழ்ந்த இவரின் ஓவியங்கள் இன்று பல கோடிக்கணக்கில் விற்பனை யாகியுள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற பல ஓவியங்களை இவர் வரைந்து திருந்தாலும் அதில் அதிகம் கவனிக்கப்படாத ஒரு ஓவியம் தான் "Cafe terrace at night". ஆரம்ப காலத்தில் இவ்ஓவியம் பெரிதாக கவனிக்கப் படவில்லை. ஆனால் சில காலங்கள் போன பிறகுதான் இதில் காணப் படும் குறியீடுகளை நோக்கி இது எதையோ உலகத்திற்கு சொல்ல வருவதாக கவனித்து ஆராய ஆரம்பிக்கின்றார்கள். மேலும் இக் குறியீடுகளை பல ஆராய்ச்சியாளர்கள் கவனித்து அந்த குறியீடுகள் மூலம் இது ஏதோ தெரிவிக்க வருகிறது என்ற கருத்துக்களை முன் வைத்தார்கள்.

அப்படி ஆராய்ச்சி மூலம் அவர்கள் கண்டுபிடித்தது உலக பிரசித்து பெற்ற ஓவியமான "இறுதி இராப்போசனம்" (The Last Supper) என்ற ஓவியத்தின் மறு பதிப்பு தான் இது என்று.

அது 1498ல் வரையப்பட்டது இந்த Cafe Terrance at Night ஆனது 1888-ல் வரையப்பட்டது இயேசு கிஸ்துவின் கடைசி விருந்தான Last supper ஓவியத்தை பல ஓவியர்கள் தங்களுடைய பாணியில் வரைந்தார்கள். நூற்றுக்கணக்கான Last supper ஓவியங்கள் காணப்படுகிறது. ஆனால் அதில் புகழ்பெற்றது லியானாடோ டாவின்சியால் வரையப்பட்ட "இறுதி இராப்போசனம்" ஓவியம் தான். அது போல வான்கோவின் ஓவியங்கள் பல வகையில் காணப்பட்டாலும் இந்த Last Supper எனும் ஓவியத்தை அவர் வரைந்திருப்பார் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதில் காணப்படும் குறியீடுகளை கவனித்த நோக்கினால் ஓவியத்தின் மையத்தில் வெள்ளை நிற சட்டை அணிந்திருக்கும் உணவு பரிமாறுபவரின் பின் காணப்படும் கோடுகளினால் சிலுவைவடிவக் குறியீடு காட்டப்பட்டுள்ளது, மேலும் அவ் ஓவியத்தில் 12 மேசை களும் பல இடங்களில் காணப்படும் சிலுவைக் குறியீடுகளும் டாவின்சி யால் வரையப்பட்ட "இறுதி இராப்போசனம்" எனும் ஓவி யத்துடனும் ஒத்துப்போகின் றமையைக் காணலாம்.



# Believe in Your Dream

**- P.Nekeshan -**

In the quiet stillness of a hospital room in June 2017, a young Charles Leclerc gazed into his father's eyes and softly declared, "I've signed my Formula 1 contract." Though it wasn't yet true, it was a promise wrapped in hope, a declaration made in the face of uncertainty.

Less than a month later, Charles signed with Sauber for the 2018 F1 season, transforming that whispered hope into the foundation of his journey to motorsport's highest competition.



Fast forward to May 2024: emotions were raw as Charles navigated the streets of Monte Carlo in a car painted red with destiny. The Monaco Grand Prix ,his childhood dream, his home, his heartbreak would finally become the stage of fulfillment he'd longed for. As the checkered flag beckoned, he held it together, even as tears blurred his vision and his heart raced with remembrance. "I was struggling to see... tears in my eyes," he later admitted, capturing the weight of that moment.

In 2025, Charles found himself not only at the pinnacle of his sport but also alongside a legend. Seven-time World Champion Lewis Hamilton joined Ferrari, partnering with Charles in a lineup that combined youth and experience. Despite the challenges of a competitive season, Charles's resilience and belief in his dream remained unwavering.

From a whispered hope to a champion's tears, Charles Leclerc's journey shows us the transformative power of belief. When you declare your dream when you dare to speak it into existence you plant the seed of its fulfillment. And sometimes, that belief is all you need to change destiny.



# CHINA'S RISE IN EMBODIED AI & ROBOTICS

**- S. Zeemeennaj -**

When you look at your embodied eye is the range in china. From Industrial automation to autonomous EVs, from the delivery drones to increasingly advanced robotic humanoids and pets. AI is on the board and with their sensors, motors and natural language processing. Now they're interacting with us and the rest of the physical world, and it's arriving in much more lifelike packaging. As Creepy as that may be. China's Ministry of Industry and Information Technology says China since last year has produced nearly 100 embodied A.I robotics products, claiming the country holds 70% of the global market due largely to it's unrivaled stem to stern supply chain of critical parts and advancement in its own AI and chips. The embodiment, if you will, of China's deep seek moment is the ushered in a whole of corporate culture where we're trying many Jedi I use case we have also labs and these who are working on these things when with this ever impact the bottom line will have a real impact. We think that's the question we do know that the central government has put out a venture fund tapping about $138billion for the development of humanoid robots, for the industry and for personal use.

That is a lot of money and probably just the tip of the iceberg in an otherwise difficult job in market in China. Online recruitment firm Galphin says. The number of job openings in china's humanoid robotics sector has quadrupled so far this year from last year, with salaries for the needed algorithm engineers rising well last the average urban pay. Hangzhou based Unitary is one of the pioneers of consumer robotics in China, offering it's latest so called humanoid agent AI Avatar, the four foot two inch £77 G On the web for $16,000.So you can do all kind of things. You can run, jump, can get your coffee for $600, there's the for the ultra wide recognition LIDAR equipped got door with the plenty of tricks up its flexible knee joint Motors. It is just the beginning stage for China's vast industrial complex as well. Rapid automation includes the increasing use of inspection and diagnostic bots with embodied AI, such as Lenovo's six legged daystar, deployed in places unreachable by or unsafe for humans. I think the Chinese robots will come in the world, you know in a way that as a price for money, the parts of value that will be quite feasible with the backing of state policy and Funds. Expect a myriad of new embodied AI products to try and grab your attention. Like it or not, we may be staring directly into the future.

# செம்மொழியான தமிழ்மொழி

**- அ.ர.ஜெயதீபன் -**

"கண்ணதாசன் வரிகளாய்
கம்பன் காவியமாய்
வள்ளுவரின் நெறிகளாய்
ஔவை மொழிகளாய்
பாரதியின் வீரமாய்
அன்னை தமிழாய்"

எம் மொழியும் எட்டிடா உயரத்தை எட்டிட்ட எம் மொழியாம் செம்மொழியான தமிழ்மொழி இற்றைக்கு உலகினிலே 6809 - 7102 வரையிலான மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றிலே எழுத்துக் களைக் கொண்ட மொழிகள் வெறுமனே நூறு இவற்றிலே செம்மொழியாக கருதக்கூடிய மொழிகள் தமிழ், கிப்கு, கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் மற்றும் சீன மொழிகள் போன்ற ஆறு மொழிகள் மாத்திரமே. அந்தவகையில் ஒரு மொழியானது செம்மொழியென அந்தஸ்தைப் பெறுவது ஒன்றும் அவ்வளவு எளிதான காரியமல்ல ஏன்? அத்தனை சிறப்பு பெற்ற எம் தாய்மொழியாம் தமிழ்மொழி கூட தொண்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுநிலைமை, தாய்மை, தனித்தியங்கும் தன்மை, சிறந்த இலக்கண, இலக்கிய வளம், கலைநயம், உயர்ந்த சிந்தனை, மொழிக்கோட்பாடு என்ற பதினொரு பண்புகளைக் கொண்டதனால் தான் செம்மொழியென்று அந்தஸ்தைப் பெற்றது.

எனினும் பாவாணர் பதினாறு தன்மைகளால் தமிழ் செம்மொழித் தன்மை பெற்றுள்ளது என்று கருதுகின்றார். அவை தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்ற பதினாறு தன்மையும் தமிழுக்கு இருப்பதாகப் பாவாணர் கருதுகின்றார். இதன் காரணமாகவும் தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றிருக்கிறது என்பது அறியத்தக்கதாகும்.

உலகளவில் தமிழ்மொழியானது செம்மொழி யாக கருதப்பட்டாலும் இந்திய அரசினால் தமிழ் மொழிக்கு செம்மொழி என்று அந்தஸ்து அவ்வளவு எளிதாக கிடைக்கவில்லை. இந்திய வழக்கப்படி ஒரு மொழி செம்மொழியாக வேண்டுமானால் அந்த மொழியானது 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தாகவும் தனக்கென சிறந்த இலக்கண, இலக்கியம் கொண்டதாகவும் தனக்கென தனி நாகரிகம், கலாசாரம் கொண்டிருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அந்தவகையில் இவை அனைத் திலும் சிறப்புப் பெற்ற எம் தாய்மொழியாம் தமிழ்மொழியானது இந்திய அரசினாலே 2004ஆம் ஆண்டு ஜீன் மாதம் 6ம் திகதி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

எது எவ்வாறாக இருப்பினும் "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி எம் தமிழ் குடி" என்று 15 000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தமிழ் இனத்தினதும் தமிழ் மொழியினதும் வரலாற்றினை வெறுமனே 1000 ஆண்டுகளென சுருக்கக் கூறியது எம் அனை வரையும் நெகிழ வைக்கின்ற செயலாகவே இருக்கிறது. எது எவ்வாறாக இருப்பினும் இந்தியா விலே வழக்காற்றில் இருக்கின்ற இருபத்திரண்டு ஆட்சி மொழிகளிலேயே செம்மொழியென அந்தஸ் தைப் பெற்ற முதல் மொழி எம்

தாய்மொழியாம் தமிழ் மொழி என்றால் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டிய விடயம் தான். ஆம் இது மட்டுமா? உலகளாவிய ரீதியிலே தமிழ்மொழிக்கென உலக தமிழ்மொழி மாநாடுகள் என்ன? ஆம் செம்மொழி மாநாடுகள் என்ன? செம்மொழியான தமிழ்மொழியாம் என்ற மையப் பாடல்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு செம்மொழி மாநாடும் மிக கோலாகலமாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது என்றால் பெருமை தானே. ஆம் உலகிலே அதிசயங்கள் ஏழு என்பார்கள். நான் கண்ட ஒரே அதிசயம் என் தாய் மொழியாம் தமிழ் மொழி மாத்திரமே. அந்தளவுக்கு எண்ணிலடங்கா அற்புதங்களையும், அதிசயங் களையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

தாய்மொழியாம் தமிழ் மொழி என்பது உலகிலே தோன்றிய முதல் மனித இனம் தமிழ் இனமாகத்தான் இருக்க வேண்டும் என்று ஆய்வாளர் அலெக்ஸ் கொலியர் குறிப்பிடுவதனூடாக தமிழ் மொழியின் தொண்மையையும் பழைமையையும் தெள்ளத் தெளிவாக அறிய முடிகின்றது. ஆம் எம் தாய் மொழியாம் தமிழ்மொழி தொண்மையிலும் பழைமையிலும் மட்டுமா? சிறந்தது இனிமையிலும், பெருமையிலும் சிறந்தது என்பதை உணர விரும்பினீர்கள் என்றால் தமிழ் தமிழ் தமிழ் தமிழ் என்று ஒரு கணம் சொல்லிப் பாருங்கள் உங்கள் அனைவருடைய காதுகளிலும் அமிழ்து அமிழ்து என தேனாய் பாய்வதை உணர்வீர்கள். ஆதலால் தான் பாரதியார் கூட "செந்தமிழ் நாடு எனும் போதினிலே இன்ப தேன் வந்து பாயுது காதினிலே" என்றும் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழைப் போற்றிப் புகழ்கின்றார். ஆம் இதுமட்டுமா? "தமிழுக்கு அமுதென்று பெயர் இன்ப தமிழ் எங்கள்

உயிருக்கு நேர்” என்று பாரதிதாசனும் கூறுவதனூடாக தமிழ் மொழியின் பெருமையினையும், இனிமையினையும் தெள்ளத் தெளிவாக உணர முடிகின்றது.

அதுமட்டுமன்றி தமிழானது இயல், இசை, நாடகம் என மூன்றும் இணைந்து முத்தமிழ் என்று போற்றப்படுகின்றது. எழுத்து நடைவாயிலாக வெளிப் படுத்தப்படுவது இயல்தமிழ் எனவும் பாடல்கள் ஊடாக வெளிப்படுத்தப்படுவது இசைத்தமிழ் எனவும் அங்க அசைவுகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவது நாடகத்தமிழ் எனவும் மூன்றும் இணைந்து முத்தமிழ் என்றும் உலகை ஆழ்கின்றது என்றால் மிகையாகாது. ஆம் தமிழர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் பண்பாட்டை வெளிப்படுத்திய ஆடை அணிகலன்களைப் பற்றி அறிந்து கொள்ள அகழ்வாராய்ச்சிகள் உதவுகின்றன.

அண்மைக் காலத்திலே சிவகங்கை மாவட்டத்திலே கீழடி எனும் பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கூட தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் மேலும் கண்டு பிடிக்கப்பட்டன. இதன் மூலம் தமிழ்மொழியானது ஆதி தமிழ் மொழியென தெள்ளத்தெளிவாக புலப்படுத்தப்பட்டது. அதுமட்டுமா கனியன் பூங்குன் றனார் பாடிய “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற புறநானூற்று பாடலடிகள் இன்றளவும் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ்மொழியின் பெருமையினையும், இனிமையினையும் எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

அதே போல் தான் நடுவன் அரசு 2004ஆம் ஆண்டு 10ம் மாதம் 12ம் திகதி அன்று வேறு எந்த மொழிகளின் துணையின்றி தனித்தியங்கும் செம்மொழியென தமிழ் மொழியை அறிவித்தது. இது தமிழ் மொழிக்கு வழமையும் பெருமையும் சேர்ப்பதாகவே அமைந்திருக்கின்றது. அன்று தொட்டு இன்று வரை தமிழ் மொழியானது தமிழர் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் உயிரை வளர்க்க உயிர் எழுத்து எனவும் மெய்மையை வளர்க்க மெய் எழுத்து எனவும் உயிருடன் மெய்யை வளர்க்க உயிர்மெய் எழுத்து எனவும் எங்கள் மானத்திற்கும் வீரத்திற்கும் கலங்கமேற்படும் ஒரு நிலை வந்தால் ஆயுதம் ஏந்தவும் சலைத்தவர்கள் இல்லை என்பதை உணர்த்த ஆயுத எழுத்தும் கொண்டு வெறுமனே 247 எழுத்துக்களைக் கொண்டு மனித வாழ்க்கையிலும் பின்னிப்பிணைந்து பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. தமிழ் என்ன எழுத்துக்களில் மட்டுமா சிறந்தது இல்லை இல்லை ஒரு மனிதருடைய இரத்தத்தை சுத்தம் செய்வது இதயத்தின் வேலை அந்த இதயத்தையே சுத்தம் செய்வதுதான் தமிழ் இலக்கியத்தின் வேலை என்பார்கள். அந்தளவுக்கு சிறப்புமிக்க பல இலக்கியங்கள், காப்பியங்கள், உரைநடைகள், நாடகங்கள், பாடல்கள் என்று இன்னும் பலவற்றை தன்னகத்தே கொண்டு இன்று எம்மொழியும் எட்டிடா உயரத்தில் கொடிகட்டி பறக்கின்றது எம் தாய்மொழியான தமிழ்மொழி. இதனால் தான் தமிழ் மொழியின் பெருமை அறிந்த அயல்நாட்டவர்கள் கூட தமிழ் மொழியை கற்றது மட்டும் அல்லாமல் தமிழ் மொழியில் பல இலக்கண இலக்கியங் களையும் படைத்திருக்கின்றார்கள். திருக்குறளை உலகறியச் செய்தவர் G. U போப் என்பவர். இவர் திருக்குறளை தமிழ் மொழியில் மொழி பெயர்த்த போதும் தன்னை ஒரு தமிழ் மாணவன் என்றே உலகறியச் செய்தார்.

“இவ்விடத்திலே சற்று சிந்தித்துப் பாருங்கள்” வேறு நாட்டவராக இருந்தாலும் வேற்றுமொழி பேசுபவராக இருந்தாலும், தமிழ் மொழியின் பெருமையறிந்து தமிழ் மொழியை கற்றது மட்டுமல்லாமல் தமிழ் மொழியில் பல இலக்கண இலக்கியங்களைப் படைத்த பு.ரு போப் மற்றும் வீரமா முனிவர் போன்றவர்கள் எங்கே? வீரத் தமிழ் தாய் தந்தையர்களுக்கு மகனாக, மகளாக பிறந்து நம் தாய்த் தமிழை நாவிலே உச்சரிக்க வெட்கப்படுகின்ற நாம் எங்கே? எங்கே?

“ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்” தமிழ் என்பது அவமானம் அல்ல தமிழ் என்பது எம் தமிழர்களாகிய எம் ஒவ்வொருவருடைய அடையாளம் இன்று நீங்கள் விரும்பிக் கற்கும் வேறு எந்த மொழியுமே உணர்வுக்கு உயிர் ஊட்டாது. ஆனால் எம் மொழியாம் தமிழ் மொழி உணர்விற்கு உயிர் ஊட்டும், உணர்வை வளர்க்கும், காதல், மானம், வீரம் என்பவற்றை கருவிலே வளர்க்கும் மொழி எம் மொழி கற்றவர் எவரும் முறை கெட்டுப் போனதில்லை. எம்மொழி கற்றவர் பலரும் அதை தம் மொழியெனக் கண்டார்.

“இப்படித்தான் தமிழ் பிறந்தது இதனால் தான் தமிழ் சிறந்தது” ஏன் இதை எழுதிக் கொண்டிருக்கும் என் மரபனு மட்டும் தமிழர் வழி இல்லையென்றால் மரணித்து மறுபடி பிறப்பேன் தமிழனாக....

தமிழனாக பிறந்ததற்கு நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.... அது அழியாமல் பாதுகாக்க வேண்டும்....

**“வாழ்க தமிழ் வளர்க தமிழ்”**

# தலைமைத்துவ நடைமுறையில் எதிர்பார்ப்புகள்

## (Expectations Matter in Leadership)

**சுவர்ணராஜா.க**
ஓய்வுநிலை பீடாதிபதி

ஒரு சிறந்த தலைவராக இருக்க வேண்டும் என்றால், உங்கள் அணியினரிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் நெறிமுறைகள், பணிநிலை, அல்லது செயல்பாடுகள் எவை என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம். ஏனெனில், நீங்கள் எதிர்பார்க்கும் ஒவ்வொரு விடயமும் உங்கள் அணியின் செயல்திறனை, உறுதியை, மற்றும் ஒற்றுமையை தீர்மானிக்கக்கூடியவை.




தலைவரின் எதிர்பார்ப்புகள் குழு இயக்கம், ஊக்கம், பொறுப்புணர்வு மற்றும் நிறுவன கலாச்சாரத்தைப் பாதிக்கின்றன. உங்கள் எதிர்பார்ப்புகள் தெளிவாக இருந்தால், குழுவினர் தங்கள் பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை தெளிவாக புரிந்துகொள்வார்கள். இது குழப்பங்களைத் தவிர்த்து, ஒழுங்கான செயற்பாடுகளை உருவாக்க உதவும்.

உங்கள் எதிர்பார்ப்புகள் நியாயமானவை மற்றும் நிலையானவை என்றால், அது குழுவினரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும். “என்ன செய்வதென்று தெரியாத நிலை” என்பது குழுவினரை மன அழுத்தத்திற்கு உள்ளாக்கும்.

பல தலைவர்கள் தமது குழுவினரிடம் ஒழுக்கத்தை, நேர்த்தியான பணியாற்றும் மனப்பான்மையை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களே அவ்வாறு நடக்காத போது, குழுவில் ஊக்கம் குறைய ஆரம்பிக்கும். எனவே உங்கள் எதிர்பார்ப்புகளுக்கேற்ப நீங்கள் உங்கள் செயல்களில் நேர்மையாக இருக்க வேண்டும்.

உங்கள் குழுவின் வளர்ச்சிக்கு உங்கள் எதிர்பார்ப்புகள் ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டும். நீங்கள் உயர்ந்த தரத்தை எதிர்பார்க்கும்போது, குழுவும் அதனை அடைய முயலும். ஆனால், அது இயல்பற்ற அழுத்தமாக இருக்கக்கூடாது. உணர்வுப்பூர்வமான சமநிலையுடன் இருக்க வேண்டும்.

தலைமைத்துவ விருத்தி பயிற்சிகளில் எதிர்பார்ப்புகளை நிர்வகிக்கும் திறன் கட்டாயமாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அதில் பின்வரும் விடயங்கள் கட்டாயமாக உள்ளடக்கப்படல் வேண்டும்.

☞ எதிர்பார்ப்புகளைத் தெளிவாகவும் நேர்மையாகவும் தெரிவிப்பதற்கான பயிற்சி.

☞ எதிர்பார்ப்புகள் எவ்வாறு உணரப்படுகின்றன என்பதை கண்டறியவதற்கான நுட்பங்கள்

☞ ஒரு தலைவராக நீங்கள் சொல்வதை நீங்கள் பின்பற்றுகிறீர்களா என்பதைப் பார்ப்பதற்கான சுய விழிப்புணர்வு.

☞ மூத்த தலைவர்கள் சிறந்த எதிர்பார்ப்பு நிர்வாகத்தின் முன்னுதாரணமாக இளைய தலைவர்களுக்கு வழிகாட்டுவதற்கான திறன்கள்.

உங்கள் குழுவினரிடமிருந்து எதை எதிர்பார்க்கிறீர்கள் என்பதைக் கவனிக்காத தலைமைத்துவம், திசைதெரியாத கப்பலைப்போல் ஆகிவிடும்.

# பிள்ளைகளிடம் உயர்ந்த குணங்களை விதைப்போம்

- A.JebaJena -
R/B Dethanagala T.V.



வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையின் ஒரு முக்கிய அம்சம் மதிப்பீடு ஆகும். மதிப்பீடு என்பது மாணவர்களின் கல்வி அடைவுகளை மட்டுமே கணிப்பதற்கல்ல, அவர்கள் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான வழிகாட்டுதலையும் வழங்கும் செயல்.

பிள்ளைகள் தம்மைப்பற்றி உயர்வான கருத்துக்களையும் பாராட்டுக்களையும் விரும்புகின்றனர். நேர்மறை பாராட்டுகள் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கின்றன. மாறாக தண்டனைகளால் விரும்பத்தகாத நடத்தைகளை முழுமையாக மாற்ற முடியாது சில சமயங்களில் மேலும் எதிர்மறையான விளைவுகளை உருவாக்கக்கூடும். எனவே பிள்ளைகளின் நற்பண்புகளை அடையாளம் கண்டு அவற்றை ஊக்குவிப்பதே சிறந்த வழிமுறையாகும்.

## பாராட்டின் வலிமை

மனிதத்துவ அணுகுமுறையின்படி, ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர். கல்வியில் பின்தங்கினாலும், அவர்கள் அன்பு, கருணை, பணிவு, நன்றியுணர்வு, படைப்பாற்றல், குழு ஒற்றுமை, விடா முயற்சி போன்ற பல நல்ல பண்புகளில் சிறந்து விளங்கலாம். ஆசிரியர்கள் இந்நற்பண்புகளை கவனித்து பொதுவெளியில் பாராட்டினால், மாணவர்கள் தங்களை மதிக்கப்பட்டவர்களாக உணர்வர்.

## பாராட்டுச் சொற்கள்

“உங்கள் திறமை அற்புதமானது”, “உங்களது தலைமைத்துவம் சிறப்பானது”, “உங்களைப் பார்த்து பெருமை கொள்கிறேன்” போன்ற எளிய வார்த்தைகள் கூட பிள்ளைகளின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். இவை வெறும் வார்த்தைகளாக அல்லாமல், உண்மையான அன்புடனும் மகிழ்ச்சியுடனும் சொல்லப்படும்போது பிள்ளைகள் உற்சாகமடைவார்கள்.

## நல்ல பண்புகளைப் பதிவு செய்தல்

பாடசாலைகளில் மாணவர்களின் தேர்ச்சி, ஒழுக்கம் போன்றவை பதிவாகும். ஆனால் அவர்கள் வெளிப்படுத்தும் நல்ல பண்புகள் பெரும்பாலும் பதிவு செய்யப்படுவதில்லை. நல்ல பண்புகளுக்கான தனிப்பட்ட ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டால், அது மாணவர்களின் தனித்துவ அடையாளமாகவும் எதிர்கால வளர்ச்சிக்கான ஊக்கமாகவும் அமையும்.

## குணநலன்களை வளர்த்தல்

கலைத்திட்டங்கள் மறைமுகமாக நற்பண்புகளை வளர்க்க முயன்றாலும், சமூக வாழ்வில் அத்தியாவசியமான பண்புகள் இன்னும் போதிய அளவில் வளர்க்கப்படவில்லை. பிள்ளைகள் பிறரை மதிப்பது, பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது, தமது உரிமையோடு கடமைகளையும் நிறைவேற்றுவது போன்ற உயரிய பண்புகளை பாடசாலை, வீடு, சமூக வாழ்வில் நேரடியாகக் கற்பிக்க வேண்டும்.

எனவே, பிள்ளைகள் அனைவரும் கல்வியில் சிறந்தவர்களாக இருக்க முடியாது. ஆனால் ஒவ்வொருவரும் தனித்துவமான நற்பண்புகளைக் கொண்டவர்களாக இருப்பர். ஆசிரியர்கள் அவர்களின் நல்ல பண்புகளை அடையாளம் கண்டு பாராட்டி ஊக்குவிக்கும் போது, அவர்கள் தன்னம்பிக்கையுடன் வளர்வார்கள். எதிர்காலத்தில் சமூகத்துக்கு தேவையான நல்ல பண்புகளும் மனிதநேய குணங்களும் அவர்களிடம் வேரூன்றும்.



****

# கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it

# பேசும் படங்கள்



**M. Adhish**
Grade 4 E
S. Thomas' College
Mount Lavinia



**M. Sasthika**
Grade 5 B
Bishop's College,
Colombo 03.

சம்பந்தப்பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட்சை மற்றும் ஆவணப்படுத்தல் அல்லது நூலகத் தேவைகளுக்காக இவ் குருசேத்திரம் மின்னிதழை தேவைப்படுபவர்கள் A4/A3 தாள்களில் பிரதி எடுத்துக்கொள்ளலாம். எனினும் ஆசிரியரின் அல்லது கட்டுரையாளரின் அனுமதியின்றி மீள்பிரசுரம் செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.
- ஞா.கயூரன், பதிப்பாசிரியர் -